விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 02.55 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 03.15 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No.CC.No.288/2020

Petitioner side witness : அ.சா. 1 Date : 28.01.2025

| | |
|---|---|
| Name : இளவரசி | Taluk : குமாரபாளையம் |
| Husband Name : கார்த்திக் | Calling : அரசு |
| Village : குமாரபாளையம் | Age : 27 |

(A2, A3 present. Other all accused absent. Filed petition and allowed.)

எதிரி தரப்பில் கு.வி.மு.ச 311 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

## குறுக்கு விசாரணை

என்னுடைய திருமணம் முறைப்படி நடைபெறவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் தான் எனக்கும் 1ம் எதிரிமனுதாரருக்கும் திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்து அதன் பின்பு தான் எனக்கு திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். திருமணம் எந்த தேதியில் நடைப்பெற்றது எனறால் 11.02.2019 ம் தேதி நடைப்பெற்றது. காவல் நிலையத்தில் வைத்து நடந்தது என்றும் அன்றைய இரவு என் மாமானர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என்னுடைய மாமானார் வீடு கீழ்மொலப்பாறையூரில் தான் உள்ளது என்றால் சரிதான். என் மாமானார் வீட்டில் எத்தனை மாதங்கள் இருந்தேன் என்றால் 3 மாதங்கள் இருந்தேன். நான் புகார் கொடுத்த விவரம் மற்றவர்களுக்கு நான் சொன்ன பிறகு தான் தெரியும்

என்றால் சரிதான். கீழ்மொலப்பாறையூரில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 50 வீடுகள் உள்ளது. மாமானார் வீட்டின் பக்கத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 10 வீடுகள் உள்ளது. என்னுடைய சித்தி செந்தாமரை வீடு 5 கி.மீ. தள்ளி மேல்மொலப்பாறையூரில் உள்ளது. வீட்டில் யார் சமையல் செய்து வந்தார்கள் என்றால் என் மாமியார் செய்து வந்தார். அவர் கோவித்து விட்டு வீட்டை விட்டு சென்ற பிறகு நான் தான் செய்தேன். கொளத்தூர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கொளத்தூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள சி.எஸ்.ஆர் ல் கணவர் மற்றும் மாமியார் தினந்தோறும் பிரச்சனை செய்வதாக தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரின் விசாரணையில் அறிவுரை வழங்கி சேர்ந்து வாழ சொன்னார்கள் என்றால் சரிதான். என் மாமானார் மற்றும் மாமியார் கடந்த என்னை அடித்து துன்புறத்தியதை பற்றி எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை அடித்து துன்புறத்தியதற்கான காயச்சான்றிதழ் மற்றும் விபத்து பதிவேட்டு நகல் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரி 4ம் எதிரியை திருமணம் செய்தற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1ம் எதிரி 4ம் எதிரியை திருமணம் செய்துகொள்வதாக அவர் கைப்பட எழுதி வைத்த கடித்ததை தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிரி 4ம் எதிரியை எங்கு வைத்து திருமணம் செய்தார் என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதற்கு யார் யார் உதவி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம் எதிரி மற்றும் 4 ம் எதிரி பெற்றோர்கள் தான் திருமணம் செய்து வைத்தார்கள். நான் தனி குடித்தனம் போகும் நோக்கத்தில் எனக்கு 1ம் எதிரியுடன் திருமணம் ஆன

காலத்திலிருந்து நான் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 2ம் எதிரிக்கு திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை யாரும் அடித்து துன்புறுத்தவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஓம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**